செ.வெ.எண்:24 நாள்:10.10.2017

# ஊரக மற்றும் நகர்புற இளைஞர்/மகளிர்களுக்கு வேலைவாய்ப்பு முகாம்

கரூர் மாவட்டத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் கரூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் இணைந்து ஊரக மற்றும் நகர்புறப் பகுதிகளில் உள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்/மகளிர்களுக்கு கரூர், நகராட்சி மேல்நிலைபள்ளியில் 14.10.2017 சனிக்கிழமை அன்று காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை "இலவச வேலைவாய்ப்பு முகாம்" நடத்தப்படவுள்ளது. இம்முகாமில் தமிழகத்தின் முன்னனி தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டு தகுதியான நபர்களை வேலைக்கு தேர்வு செய்யவுள்ளனர்.

வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ள விரும்பும் வேலைநாடுநர்கள் (Job Seekers) www.ncs.gov.in இணையதளத்தில் பதிவு செய்து அதற்கான ஒப்புகை சீட்டுடன் வேலை வாய்ப்பு முகாம் நாளன்று வருகை தரவும். வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ள விரும்பும் வேலை வழங்குபவர்களும், ( Employers) மேற்காணும் இணையத்தளத்தில் பதிவு செய்த விவரத்தை jobmela.karur@gmail.com / dpiu_kr@yahoo.com என்ற மின்னஞ்சலுக்கு தெரியப்படுத்தவும்.

இம்முகாமிற்கு வருகை தரும் வேலைநாடுநர்கள் போதுமான எண்ணிக்கை சுய விவர குறிப்பு நகல்கள், சான்றிதழ் நகல்கள், பாஸ்போட் அளவு புகைப்படத்துடன் கலந்து கொள்ளவும். இம்முகாமிற்கு அயல்நாட்டு வேலைவாய்ப்பு விவரம் அறிந்து கொள்ளவும், பதிவு செய்து கொள்ளவும், அயல் நாட்டு வேலைவாய்ப்பு அலுவலகத்தின் அரங்கு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

வேலைநாடும் இளைஞர்கள் தங்களது தொழில் திறனை வளர்த்துக் கொள்ள தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் மூலமாக வழங்கப்படும் பயிற்சிக்கு பதிவு செய்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் மேற்கொள்ளப்படும் பதிவு, புதுப்பித்தல், சிறப்பு புதுப்பித்தல் மற்றும் கூடுதல் பதிவு ஆகிய பணிகளை செய்து கொள்ளலாம்.

இவ்வோலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ளும் தனியார் தொழில் நிறுவனங்கள் தங்களது நிறுவனங்களின் பெயரினை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மகளிர் திட்ட அலுவலகத்தில் முன் பதிவு செய்து கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்:

04324– 257377/ 9444094299/ 9566346462

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கரூர்.